*வினா எண். 70.—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

அ) திருச்சி நகரத்தில் முக்கிய ரோடுகள் அகலப்படுத்தி அழகு படுத்தும் திட்டமுள்ளதா?

ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அ) ஆம்.

ஆ) நகராட்சியால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. வடிவேல்: பேரவைத் தலைவரவர்களே, திருச்சி நகரத்தில் மட்டும் இவ்வாறு சாலைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதல்ல. மற்ற நகராட்சிகளிலும் சாலைகள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. அதன் காரணம் பற்றி அதிகாரிகளைக் கேட்கிற நேரத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி திருச்சியைப்பற்றியது. ஆகவே திருச்சி சாலை பற்றி மட்டும் தான் கேட்க வேண்டும். பொதுப்படையாகக் கேட்கக் கூடாது.

குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள்.

*வினா எண். 71—திரு .சு.பாலன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட தயவு செய்து வினாகளுக்கு விடையளிப்பாரா—

அ) தற்போது குடிசைப் பகுதிகளுக்கு மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் எம். எம். டி. ஏ. மூலம் அடிப்படை வசதிகள் செய்யப்படுகிறதா?

ஆ) ஆம் எனில், அதன் வேலைகளை யார் மேற்பார்வை செய்வது? செய்யப்படுகிற செலவினத்தை அங்கு வாழும் குடிசை மக்களிடம் பின்னால் வசூல் செய்ய ஏதாகிலும் திட்டமுள்ளதா? அல்லது இலவசமாகச் செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சென்னை மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் உலக வங்கித் திட்ட உதவி கொண்டு சென்னை பெருநகர் வளர்ச்சி ஆணைக்குழு மூலம் செய்து